23rd November 1963]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Employees' Provident Funds Scheme is being implemented in respect of workers in establishments covered by the Employees' Provident Funds Act.

(*b*) Does not arise.

மூலிகை மருந்துகள்

* 549 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெறிநாய்க்கடி, பாம்புக்கடி, எலும்பு முறிவு போன்றவற்றிற்கு தற்போது நாம் கையாண்டுவரும் ஆங்கில மருத்துவ சிகிச்சையைவிட உயர்ந்த உடனடி பயன்தரும் முறையில் மூலிகைகளால் சில நாட்டு வைத்தியர்கள் குணப்படுத்தி வருகிறார்கள் என்ற தகவல் அரசினருக்குத் தெரியுமா?

(இ) அவர்களால் கையாளப்படும் மூலிகைகளை ஆராய்ந்தறிந்து எல்லோரும் பயன்பெற அரசாங்கம் வகைசெய்ய உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) and (இ) சில சமயங்களில் இவ்விதத் தகவல் அரசாங்கத்திற்கு கிடைக்கின்றது. இப்படிப்பட்ட தகவல் கிடைத்ததும், மாதிரி மருந்துகள் வரவழைத்து பரிசோதனைச் சாலைக்கு அனுப்பப்படுகின்றன. பெரும்பான்மையான மருந்துகள், குணப்படுத்தும் தன்மையில் ஊக்கமளிப்பவையாக இல்லை. ஆயுர்வேத, சித்த, யுனானி முறையில் ஒரு ஆராய்ச்சித் திட்டம் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் இப்பொழுதும் நடைபெற்று வருகிறது.

விவசாய நிலங்களை ஆர்ஜிதம் செய்தல்

* 550 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் பொதுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா —

விவசாய நிலங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டாமென ராஜ்ய சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் யோசனை கூறியுள்ளதா?

THE HON. SRI V. RAMAIAH : Yes.

திரு. கரு. சீமைச்சாமி: விவசாய நிலங்களை ஆர்ஜிதம் செய்வதால், உணவு உற்பத்தி குறைந்துவிடுகிறது என்ற காரணத்தினால் தான் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு இம்மாதிரி உத்தரவிட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு ஒன்றும் உத்தரவிடவில்லை. ஒரு ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆலோசனையை நம்முடைய அரசாங்கம்